எம்.சி.ஓ.பி எண்: 5314/2024 தேதி: 08.01.2026

மசா. : 1

பெயர் : ஜினி போபன்

க /பெ. : போபேன் மேத்யூ

வயது :40

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 15 வரை தாக்கல் செய்கிறேன். மசாஆ 13,14 ஆவணங்கள் எதிர்தரப்பு ஆட்சிபேனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பிசிஏ படித்துள்ளேன். நான் தற்பொழுது வேலை பார்க்கவில்லை. விபத்தில் 3 வாகனங்கள் சம்பந்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் கணவரின் ஓட்டுநர் உரிமம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை எ்னறால் சரி. என் கணவர் மீது லாாி ஏறியதால் இறந்தார் எ்னறால் சரி. இந்த விபத்திற்கு முழு காரணம் என் கணவர் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஓட்டி வந்ததுதான் காரணம் எ்னறால் சரியல்ல. எனக்கு ஏதவாது இழப்பீடு பெறவேண்டுமானால் லாரியின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டாளர்தான் கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. கார் பதிவெண் TN–87–E–2961 விபத்திற்கு காரணம் இல்லை என்பதால் அவர்கள் எந்த இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல எ்னறால் சரியல்ல. என் கணவரின் படிப்பு குறித்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை. மசாஆ 12,13,14 ஆவணங்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்பதால் அவை ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் ஏதவாது நிரூபிக்கவேண்டுமானால் அந்த நிறுவனத்தில் உள்ளவர்களை விசாரித்துதான் நிரூபிக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல. விபத்து என்னுடைய கணவரின் அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் 2ம் எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல.

**4ம் எதிர்மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து தேசிய நெடுஞ்சாலையில் நடந்தது என்றால் சரி. என் கணவர் பயணம் செய்த இருசக்கரவாகனத்தின் மீது கார் மோதி அவர் லாரியின் பின் பக்க டயரில் தூக்கி வீசப்பட்டு லாரி மோதி இறந்துவிட்டார் என்றால் ஆமாம். விபத்து என் கணவர் உரிய ஓட்டுநர் உரிமம்இல்லாமல் வாகனம் ஓட்டியதாலும் கார் டிரைவரின் அஜாக்கிருதையால் நடந்தது என்றால் சரியல்ல. எனவே 3,4 எதிர் மனுதாரர்கள் விபத்திற்கு பொறுப்பு கிடையாது என்றால் சரியல்ல. மசாஆ 13,14 ஆவணங்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்பதால் அவை ஏற்றுக்கொள்ளதக்கதல்லஎ ன்றால் சரியல்ல. அந்த நிறுவனத்தில் உள்ளவர்களை விசாரித்துதான் அதன் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல. விபத்து தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்டதாலும் பின்பக்க டயர் ஏறி விபத்து ஏற்பட்டதாகவும் லாரி டிரைவர் மீது எந்த தவறும் கிடையாது என்பதால் 3,4 எதிர்மனுதார்கள் விபத்திற்கு பொறுப்பு இல்லை எ்னறால் சரியல்ல. நான்கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. நான் ஏதவாது இழப்பிட பெறவேண்டுமானால் அதை 1,2 எதிர்மனுதாரர்கள் தான் கொடுக்கவேண்டும் என்றால்சரியல்ல .

1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என கூறப்பட்டது.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.